# நினைவு மலர்



அமரர்

## உயர்திரு. மு. சண்முகராசா (சண்)

(தொழிலதிபர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கரவெட்டி மேற்கு வாசகரும், உயர் சைவ வேளாண்
குடியினரும், கரணவாய் வடக்கு கொற்றாவத்தை,
கனகராய முதலி மரபினரான

**முத்தையா சின்னாச்சிப்பிள்ளை**
தம்பதியினரின் கனிஷ்ட புதல்வரும்

**பால பரமேஸ்வரி அம்மையார்**
அவர்களின் அன்புக் கணவரும்

**ஆதித்தன், அரவிந்தன், அச்சுதன், பாமா**
ஆகியோரின் அன்புத் தந்தையும்

தொழிலதிபரும்
பொதுச் சேவைத் தொண்டருமான

**அமரர்**
**உயர்திரு, முத்தையா சண்முகராசா (சண்)**
அவர்களின்

அமரத்துவ ஆராதனையில்
இம்மலர் அர்ப்பணம்

**26.01.1993**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**உயர்திரு முத்தையா சண்முகராசா**

(முன்னாள் கடல் கடந்த தொலைத் தொடர்பாளர் ஸ்தாபகர்
குளோபல் கொம்யூனிக்கேசன்ஸ் )

| | |
|---|---|
| வையக மலர்வு | விண்ணக மலர்வு |
| *13- 4- 1937* | *27- 12 - 1992* |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திதிவெண்பா

ஆங்கார ஆங்கீரச தனுத் திங்கள்சேர்
சகஜமாம் சதுர்த்தசியோடு முத்தான
முத்தையா மூன்றா மன் சண்முகராஜா
ஸ்கந்தகுரு பாதம் பற்ற பறந்த நாள்.

## விருஷாப்த திதி

ஆங்கீரச வருடம், மார்கழிமாதம் சுக்ல பக்ஷய சதுர்த்தசி திதி

## நேரிசை வெண்பா

வித்தகராய் விளங்கிய முத்தையா முழுமகள்
சின்னாச்சிப்பிள்ளை திரி மகவாம் சண்முகராஜா
சந்ததி உதித்திட பெற்றோரும், மற்றோரும்
பண் பாடப் பிறந்திட்ட சண்முகராஜா,
ஸ்கந்தக் கடவுள் பாதம் பற்றிய நாள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அன்னை மடிமுதல் ஆண்டவன் அடிவரை......

பூலோக சொர்க்கம் என்றே புவியாலும் மன்னர் எல்லோராலும் கூறப்பட்டு குபேரனும் ஆண்ட புண்ணிய தீவெனும் இலங்கைத் தீவின் கிரீடமாக ஜொலிக்கும் வடமராட்சி என்றே எல்லோரும் புகழும் கரவெட்டி எனும் ஊரிலே நுகவில் எனும் நந்தவனமதனில் முல்லைப் பூவாகவே முத்தையாவும் சின்னப் பூவாம் சின்னாச்சிப்பிள்ளையும் பாங்காகக் கைப் பிடித்து குடும்பக் கோட்டைதனில் வாழ்க்கை இராச்சியம் கொடி கட்டிப் பறந்தது. அன்று.

தாம்பத்திய வாழ்வுதனில் தாங்கள் கண்ட புதுமைதனை உலகிற்கு காட்டிடவே மும்மூர்த்திகளை வரவழைத்து முதல் மூர்த்தி கண்மணி கனக சிங்கமும், இளையவர் சிவசுப்ரமணியம், கனிஷ்ட புத்திரனாம் சண்முகராஜா என்றே பெயர் சூட்டி ஒளிவிளக்குகளாக மிளிர விட்டனர் அன்று. முதலாமவர் ஆசிரியராய் பணிபுரிந்து நாட்டிற்கு வேண்டிய அறிவாளிகளை உருவாக்க இளையவரும் கணக்காளராய்க் கடமை செய்ய கனிஷ்ட புதல்வனாம் சண்முகராஜாவோ திரை கடல் ஓடியும் திரவியம் தேடு என்பதனை மாற்றியே புகழ்தனைத் தேட புதுமை நாயகனாய் உருமாறிய விதமும் அருமையே அருமை.

பேரோடும் புகழோடும் நல்ல பிள்ளை ஒன்றை மாப்பிள்ளையாக்க யாரேனும் விடுவாரோ இப்படியோர் பொக்கிஷத்தை உருவாக்க சடுதியாய் சண்முகம், பொன்னம்மா தம்பதியர் அன்போடும் பண்போடும் ஈன்றெடுத்த பூம்பாவையாம் பால பரமேஸ்வரிதனை மணம் முடித்து வைத்தனர் நன்றே.

புதுமணத் தம்பதிகள் இருவருமே பாலோடு தேன் கலந்தாற் போல் சங்கமிக்க சந்ததிகள் தோன்றினவே நான்காக. ஆதித்தன், அரவிந்தன் அச்சுதன், பாமா என்றே அன்போடு அழைத்தனர் அனைவருமே

திரு சண்முகராஜா தான் பெற்ற இன்பமெலாம் பெற இவ் வையகம் என்பதற்கு ஏற்றாற் போல் மக்களுக்கும் தான் பெற்ற மக்களுக்கும் கல்வி புகட்டி கடமையும் சேவையும் கண்ணுங்கருத்துமாக இயங்கிவந்தார் அவர் ஒரு ஆசிரியையின் பிள்ளை என்பதற்கு எடுத்துக்காட்டாக ஆரம்பக் கல்விதனை கரணவாய் சைவ வித்தியாசாலையிலும், உயர் கல்வியை உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன், யாழ்/ இந்துக் கல்லூரியிலும் பயின்று 20 வது வயதில் கடல் கடந்த தொலைத் தொடர்புத் திணைக்கள இயக்குனராக அரச சேவையை ஆரம்பித்து பின் 1980 ல் இலங்கையிலேயே முதன்முதலாக தனியார் தொலைத் தொடர்பு ஸ்தாபனத்தை ஆரம்பித்த முதல் மனிதருள் இவரும் ஒருவரே. இது மட்டுமன்றி கணணி பயிற்சி நிலையம் ஒன்று ஆரம்பித்து மாணவ மாணவியர்கள் கணணி பயிற்சி பெறவும் பயின்ற மாணவ மணிகளுக்கு சான்றிதழ்களை வழங்கி, பொது நலன்புரி சேவைகளுக்கும் பணஉதவியும் மேலும் பல உதவிகளும் செய்து, கரணவாய் வடக்குப் பகுதிக்கு ஒளி ஏற்படுத்திக் கொடுத்து 1982 ல் யாழ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோட்டைக்கு அருகில் தொழில் தொடர்பு ஸ்தாபனம் ஒன்றை உருவாக்கி "மக்கள் சேவை மகேசன் சேவை" என்று தொண்டாற்றிய இப்பெருந்தகைக்கு சோதனை வந்த போதும் "ஆயிரம் கைகள் மறைந்தாலும் ஆதவன் மறைவதில்லை" என்பதுபோல கஸ்தூரியார் வீதியில் செல்வி நித்தியகாந்தியின் உதவியோடு கோட்டைக்கருகில் அமைத்த ஸ்தாபனம் உயிர் விடுமுன்புத்துயிர் கொடுத்தார். மேலும் கொழும்பில் மத்திய றொட்டறிக்கழக பிரதித் தலைவராகச் சிலகாலம் தொண்டாற்றியதோடு நில்லாமல் இலங்கை, இந்தியா, சிங்கப்பூர் என்று கற்றோர்க்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு என்ற பழமொழியையே மாற்றி "கற்றோர் எங்கு செல்கினும் மற்றோர்க்குச் சிறப்பு" எனும் புதுமொழி உருவாக அவதரித்தார். மற்றும் இவரின் விருந்தோம்பற் பண்பால் தனது யாழ்/கொழும்பு இல்லங்களை மற்றவர்கள் அன்ன சத்திரம் என்று அழைக்கவும் இவரே காரணமானார். கந்தஷஷ்டி விரத காலத்தில் திருச்செந்தூர் முருகன் ஆலயத்தில் தனது விரதானுஷ்டானங்களை முடித்துவரலானார். மேலும் கொழும்பு மாநகரின் முதலாம் குறுக்குத்தெரு சம்மாங்கோட்டை கதிர் வேலாயுத சுவாமி கோவிலில் ஒவ்வொரு செவ்வாய் கிழமை தோறும் விஷேட பூசையும் செய்து வந்தார். "Time is Gold" என்ற அந்நியர் வாசகத்திற்கமைய வாழ்ந்தவர்களில் இவரும் ஒருவர்.

"அத்தனை பேர்க்கும் நல்லவனாக ஆண்டவன் கூட இருப்பானா?" என்ற கூற்றிற்கமைய இவர் மீது சிலர் பொறாமை கொண்டு எதிர்த்த நேரத்திலும் மனம் தளரவில்லை. பல நல்லோர் பெரியோரின் ஆறுதல் அறிவுரைகளால் அமைதி வந்து சேர்ந்தது.

தசரத புத்திரனாய் அவதரித்த மகாவிஷ்ணு பத்து அவதாரங்கள் எடுத்து மக்களுக்கு நன்மை செய்தார். அதுபோல் இது பதினோராம் அவதாரமோ என்று நினைக்கும் வண்ணம் வாழ்ந்த இவரை தெய்வப்பிறவி என்று தான் சொல்ல வேண்டும். பழகுவதில் குழந்தையாய், கடமை செய்வதில் கண்ணியவானாய், துணிச்சலில் வீரராய், இறைபக்தியில் பித்தராய், தொண்டுகள் புரிவதில் தொண்டராய், நல்லகணவராய், மந்திரம் சொல் பிதாவாய், உயிர் காக்கும் நண்பராய், நல்மணியாய், நல்முத்தாய், நல்மனிதகுல மாணிக்கமான இவர் "தோன்றலில் புகழோடு தோன்றுக அஃதல்லது தோன்றலிற் தோன்றாமை நன்று" என்ற வள்ளுவர் குரல் இவருக்குப் பொருந்தும் என்றால் அது மிகையாகாது.

இப்படியான ஓர் அருந்தவப் புதல்வரை நாம் இழந்து விட்டோம். ஆம் ஆயிரத்து தொள்ளாயிரத்து தொண்ணூற்று இரண்டு மார்கழி மாதம் இருபத்தேழாந் திகதியில் மாலை ஐந்தே முக்கால் மணிக்கு உலகிற்கு ஒளிபரப்பிய ஓர் உத்தம சுடர் அணைந்து விட்டது. அன்னாரின் ஆத்மசாந்திக்கு அனைவரும் பிரார்த்திப்போமாக.

ஓம்சாந்தி ! ஓம்சாந்தி!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குடும்பத்தார் துயரப்புலம்பல்

மணம் முடித்த நாள் முதலாய்
மங்கை நானும் துன்பமே அறிந்திலேன்
மாதவா நீர் என் இதய தெய்வமாயிருந்து
மாபெரும் சாதனைகள் பல புரிந்தீர்
மிகையான செல்வங்களும் புகழும் தந்தீர்
மிடுக்காக ஒரு போதும் நடந்தீரில்லை
மீண்டும் ஓர் உறவு மறுபிறவியிலும் இல்லை
மீளாத் துயிலுக்கு முடிவுதானுளதோ
முன் ஜென்ம புண்ணியத்தால் பிள்ளையென ஆனோம்
முத்தான உன் சிரிப்பை எப்போ காண்போம்
மூடிய விழியதனை திறந்திட ஏன் மறந்தீர் ?
மூத்தோரும் இளையோரும் ஏங்கிடவா உன்
மென்மையான தேகம் தன்னை தீயிலிட
மெல்ல முடியா சோகந்தனைத் தீர்க்க
மேலோனிடம் விடைகேட்டு வருவீரோ
மைந்தர் நாங்களும் மனைவி தானும்
மைத்துனரும் உற்றாரும் நண்பருமே
மொத்தமாக புடைசூழ ஏங்க வைத்து
மொட்டு (தாமரை) கண்ட சூரியனைப் போல
மோகங் காண நீரும் வந்தாலென்ன
மோஷம் கண்ட பின்பும் காலந்தாழ்த்தி
மௌனமும் கொள்வது முறையோ.

**மனைவி, மகன்மார், மகள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## என்னை அரவணைத்த தந்தைக்கு,

சித்தப்பா, சேவைகள் செய்ய, நான்
அங்கு இல்லை
பாவம் நீங்கள் என்று
பரிகாரம் செய்வதற்கு
பருவம் எனக்கில்லை
அங்கிருக்கும் போது
பருவம் வந்தபோது
பாவி நான் இங்கே
பாவி எனக் குங்களைப்
பார்க்க வழியில்லை
ஏன் எங்கள் குடும்பத்திற்கு
பாதி நூறு வயதென்று
எழுதி விட்டான், ஆண்டவன்
கதறுகிறேன் உங்கள் முகம்
காண வேண்டும் என்று,
கரணங்கள் போட்டாலும்
கரம் கொடுக்கான் ஆண்டவன்
விதி முடிந்து விட்டதென
விசாரித்துப் போய் விடுவர்
எனக்கு விபரம் தெரிவிக்க,
யாருமில்லை அங்கேயோ?
சிந்தனைகள் என் மனதில்
சிறகடித்துப் பறக்கிறது
சொந்தம் மட்டும் என்னை விட்டு
சொர்க்கத்துக்கு போனதுவோ
உயிர் வாழ உணவளித்த
உத்தமனார் உங்கள் முகம்
இந்த உயிரினுள் பசு மரத்து
ஆணியாய் போனது உண்மை.

**மகன் றஞ்சன்**
(டென்மார்க்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அநேகர் புலம்பல்

அன்பெனும் அகல் தன்னில் பாசமெனும்
நெய் ஊற்றி பண்பெனும் திரியாலே
புகழெனும் ஒளி தனைப் பூலோகத்தில் தந்துவிட்டு
மேலோக வாழ்வதனை வேண்டிப் புறப்பட்டு
போனீரோ பெருந்தகையே

தன்னை உருக்கி மற்றோர்க்கு ஒளி கொடுக்கும்
மெழுகுவர்த்தி போல் உம்மை வருத்தி பல
புதுமைகள் செய்த நீரும் இறுதியிலும்
புதுமையாக எம்மை ஏங்கவிட்டீர் ஐயா
தனையர்கள் உளார் தருமங்கள் செய்ய
தர்மபத்தினியும் உறுதுணையாய் இருப்பாரென்றோ
தகனத்துள் சங்கமிக்கச் சம்மதித்தீர் பிரபோ:

**உற்றார், உறவினர்**
**ஸ்தாபன ஊழியர்கள், நண்பர்கள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தோற்றம்

*ஆத்மா!*

ஆம் இது எங்கிருந்து வந்தது எங்கே சென்றது என்று யாராலும் கண்டதில்லை. மழலை, சிறுமை, வாலிபம், முதுமை என்று ஒவ்வொரு பருவத்திலும் ஒவ்வொரு மாறுதல்கள் நிகழ்வது போல ஒரு ஆத்மா ஒரு உடலைச் சுமந்து அதற்கோர் பெயரும் பெற்று சேவையும் புரிகிறது. அஃதே அந்த ஆத்மா சற்று ஓய்வெடுக்க விண்ணவன் அடிசென்று மீண்டும் வையகத்தில் வேறொரு உடலையும் பெயரையும் பெற்று வேறும் பல சேவைகள் புரியும். எனவே அழியக் கூடிய உடலை நினைத்து அழுவதை விட அழியாத உயிர் மீண்டும் எங்கோ ஓரிடத்தில் வந்து சேரும் என்றெண்ணி அனைவருமே இறைவனிடம் மனதைச் செலுத்துவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீ மாணிக்கவாசக சுவாமிகள் அருளிய

# திருவெம்பாவை

## முதல் பாட்டு

ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ்
சோதியை யாம்பாடக் கேட்டேயும் வாள் தடங்கண்
மாதே வளருதியோ வன்செவியோ நின்செவிதான்
மாதேவன் வார்கழல்கள் வாழ்த்திய வாழ்த்தொலி போய்
வீதிவாய்க் கேட்டலுமே விம்மிவிம்மி மெய்ம்மறந்து
போதார் அமளியின்மேல் நின்றும் புரண்டு இங்ஙன்
ஏதேனு மாகாள் கிடந்தாள் என்னேஎன்னே
ஈதே எந்தோழி பரிசேலோர் எம்பாவாய்

## இரண்டாம் பாட்டு

பாசம் பரஞ்சோதிக் கென்பாய் இராப்பகல்நாம்
பேசும்போ தெப்போதிப் போதார் அமளிக்கே
நேசமும் வைத்தனையோ நேரிழையாய் நேரிழையீர்
சீசீ இவையுஞ் சிலவோ விளையாடி
ஏசு மிடமீதோ விண்ணோர்க ளேத்துதற்குக்
கூசு மலர்ப்பாதந் தந்தருள வந்தருளும்
தேசன் சிவலோகன் தில்லைச்சிற் றம்பலத்துள்
ஈசனார்க் கன்பார்யாம் ஆரேலோர் எம்பாவாய்

## மூன்றாம் பாட்டு

முத்தன்ன வெண்ணகையாய் முன்வந் தெதிரெழுந்தென்
அத்தன் ஆனந்தன் அமுதனென் றள்ளூறித்
தித்திக்கப் பேசுவாய் வந்துன் கடைதிறவாய்
பத்துடையீர் ஈசன் பழ அடியீர் பாங்குடையீர்
புத்தடியோம் புன்மைதீர்த் தாட்கொண்டாற் பொல்லாதோ
எந்தோநின் அன்புடைமை எல்லோ மறியோமோ
சித்தம் அழகியார் பாடாரோ நஞ்சிவனை
இத்தனையும் வேண்டும் எமக்கேலோர் எம்பாவாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நான்காம் பாட்டு

ஒன்நித் திலநகையாய் இன்னம் புலர்ந்தின்றோ
வண்ணக் கிளிமொழியார் எல்லோரும் வந்தாரோ
எண்ணிக்கொடுள்ளவா செல்லுகோம் அவ்வளவும்
கண்ணைத் துயின் றவமே காலத்தைப் போக்காதே
விண்ணுக் கொருமருந்தை வேத விழுப் பொருளைக்
கண்ணுக் கினியானைப் பாடிக் கசிந் துள்ளம்
உள்நெக்கு நின்றுருக யாமாட்டோம் நீயேவந்
தெண்ணிக் குறையில் துயிலேலோர் எம்பாவாய்.

## ஐந்தாம் பாட்டு

மாலறியா நான்முகனும் காணா மலையினை நாம்
போலறிவோம் என்றுள்ள பொக்கங்க ளேபேசும்
பாலூறு தேன்வாய்ப் படிறீ கடைதிறவாய்
ஞாலமே விண்ணே பிறவே அறிவரியான்
கோலமும் நம்மைஆட் கொண்டருளிக் கோதாட்டும்
சீலமும் பாடிச் சிவனே சிவனேயென்று
ஓல மிடினு முணராய் உணராய்காண்
ஏலக் குழலி பரிசேலோர் எம்பாவாய்.

## ஆறாம் பாட்டு

மானே நீ நென்னலை நாளை வந்துங்களை
நானே யெழுப்புவன் என்றலும் நாணாமே
போன திசை பகராய் இன்னம் புலர்ந்தின்றோ
வானே நிலவே பிறனே அறிவரியான்
தானே வந்தெம்மைத் தலையளித்தாட் கொண்டருகும்
வான்வார் கழல்பாடி வந்தோர்க்குன் வாய்திறவாய்
ஊனே உருகாய் உனக்கே உறுமெமக்கும்
ஏனோர்க்குந் தங்கோனைப் பாடேலோர் எம்பாவாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஏழாம் பாட்டு

அன்னே இவையுஞ் சிலவோ பலவமரர்
உன்னற் கரியா னொருவன் இருஞ்சீரான்
சின்னங்கள் கேட்பச் சிவனென்றே வாய்திறப்பாய்
தென்னா என்னாமுன்னந் தீசேர் மெழுகொப்பாய்
என்னானை என்னரையன் இன்னமுதென் றெல்லோமும்
சொன்னோங்கேள் வெவ்வேறாய் இன்னந் துயிலுதியோ
வன்னெஞ்சப் பேதையர்போல் வாளா கிடத்தியால்
என்னே துயிலின் பரிசேலோர் எம்பாவாய்.

## எட்டாம் பாட்டு

கோழி சிலம்பச் சிலம்புங் குருகெங்கும்
ஏழி லியம்ப இயம்பும்வெண் சங்கெங்கும்
கேழில் பரஞ்சோதி கேழில் பரங்கருணை
கேழில் விழுப்பொருள்கள் பாடினோம் கேட்டிலையோ
வாழியீ தென்ன வுறக்கமோ வாய்திறவாய்
ஆழியான் அன்புடைமை ஆமாறும் இவ்வாறே
ஊழி முதல்வனாய் நின்ற ஒருவனை
ஏழை பங்காளனையே பாடேலோர் எம்பா வாய்.

## ஒன்பதாம் பாட்டு

முன்னைப் பழம் பொருட்கும் முன்னைப் பழம்பொருளே
பின்னைப் புதுமைக்கும் பேர்த்துமப் பெற்றியனே
உன்னைப் பிரானாகப் பெற்றவுன் சீரடியோம்
உன்னடியார் தாள்பணிவோம் ஆங்கவர்க்கே பாங்காவோம்
அன்னவரே எங்கணவராவார் அவருகந்து
சொன்னபரிசே தொழும்பாய்ப் பணிசெய்வோம்
இன்ன வகையே எமக்கெங்கோன் நல்குதியேல்
என்ன குறைவு மிலோமேலோர் எம்பாவாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பத்தாம் பாட்டு

பாதாளம் ஏழினுங்கீழ்ச் சொற்கழிவு பாதமலர்
போதார் புனைமுடியும் எல்லாப்பொருள் முடிவே
பேதை ஒருபால் திருமேனி ஒன்றல்லன்
வேதமுதல் விண்ணோரு மண்ணுந் துதித்தாலும்
ஓதஉலவா ஒருதோழன் தொண்டருளன்
கோதில் குலத்தான்றன் கோயிற் பிணாப்பிள்ளைகாள்
ஏதவனூர் ஏதவன்பேர் ஆருற்றார் ஆர் அயலார்
ஏதவனைப் பாடும் பரிசேலோர் எம்பாவாய்.

## பதினொன்றாம் பாட்டு

மொய்யார் தடம்பொய்கைபுக்கு முகேரென்னக்
கையாற் குடைந்து குடைந்துன் கழல்பாடி
ஐயா வழியடியோம் வாழ்ந்தோங்காண் ஆரழல்போற்
செய்யா, வெண்ணீராடி செல்வா சிறுமருங்குல்
மையார் தடங்கண் மடந்தை மணவாளா
ஐயா நீ அட்கொண்டருளும் விளையாட்டில்
உய்வார்கள் உய்யும் வகையெல்லா முய்ந்தொழிந்தோம்
எய்யாமற் காப்பாய் எமையேலோர் எம்பாவாய்.

## பன்னிரண்டாம் பாட்டு

ஆர்த்த பிறவித் துயர்கெட நாமார்த்தாடும்
தீர்த்தனற் றில்லைச் சிற்றம்பலத்தே தீயாடும்
கூத்தன் இவ்வானுங் குவலயமும் எல்லோமும்
காத்தும் படைத்தும் கரந்தும் விளையாடி
வார்த்தையும் பேசி வளைசிலம்ப வார்கலைகள்
ஆர்ப்பரவஞ் செய்ய அணிகுழல்மேல் வண்டார்ப்பப்
பூத்திகழும் பொய்கை குடைந்துடையான் பொற்பாதம்
ஏத்தி யிருஞ்சுனை நீ ராடேலோர் எம்பாவாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பதின்மூன்றாம் பாட்டு

பைங்குவளைக் கார்மலராற் செங்கமலப் பைம்போதால்
அங்கக் குருகினத்தாற் பின்னும் அரவத்தால்
தங்கள் மலங்கழுவு வார்வந்து சார்தலினால்
எங்கள் பிராட்டியும் எங்கோனும் போன்றிசைந்த
பொங்குமடுவிற் புகப்பாய்ந்து பாய்ந்ததும்
சங்கஞ் சிலம்பச் சிலம்பு கலந்தார்ப்பப்
கொங்கைகள் பொங்கக் குடையும் புனல்பொங்கப்
பங்கயப் பூம்புனல்பாய்ந் தாடேலோர் எம்பாவாய்

## பதினான்காம் பாட்டு

காதார் குழையாடப் பைம்பூண் கலனாடக்
கோதை குழலாட வண்டின் குழாமாடச்
சீதப் புனலாடிச் சிற்றம்பலம் பாடி
வேதப் பொருள்பாடி அப்பொருளா மாபாடிச்
சோதித் திறம்பாடிச் சூழ்கொன்றைத் தார்பாடி
ஆதி திறம்பாடி யந்தமா மாபாடிப்
பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளைதன்
பாதத் திறம்பாடி யாடேலோர் எம்பாவாய்.

## பதினைந்தாம் பாட்டு

ஓரொருகால் எம்பெருமான் என்றென்றே நம்பெருமான்
சீரொருகால் வாயோவாள் சித்தங் களிகூர
நீரொருகால் ஓவா நெடுந்தாரை கண்பனிப்பப்
பாரொருகால் வந்தனையான் விண்ணோரைத்தான் பணியான்
பேரையற் கிங்ஙனே பித்தொருவர் ஆமாறும்
ஆரொருவர் இவ்வண்ணம் ஆட்கொள்ளும் வித்தகர்தான்
வாருருவப் பூண்முலையீர் வாயார நாம்பாடி
ஏருருவப் பூம்புனல்பாய்ந் தாடேலோர் எம்பாவாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பதினாறாம் பாட்டு

முன்னிலைக் கடலைச் சுருக்கி யெழுந்துடையாள்
என்னத் திகழ்ந்தெம்மை ஆளுடையாள் இட்டிடையின்
மின்னிப் பொலிந்தெம் பிராட்டி திருவடிமேல்
பொன்னஞ் சிலம்பிற் சிலம்பித் திருப்புருவம்
என்னச் சிலைகுலவி நந்தம்மை ஆளுடையாள்
தன்னிற் பிரிவிலா எய்கோமான் அன்பர்க்கு
முன்னி அவள் நமக்கு முன்சுரக்கும் இன்னருளே
என்னப் பொழியாய் மழையேலோர் எம்பாவாய்.

## பதினேழாம் பாட்டு

செங்க ணவன்பால் திசைமுகன்பால் தேவர்கள்பால்
எங்கும் இலாதோர் இன்பம்நம் பாலதாக்
கொங்குண் கருங்குழலி நந்தம்மைக் கோதாட்டி
இங்குநம் இல்லங்கள் தோறும் எழுந்தருளிச்
செங்கமலப் பொற்பாதந் தந்தருளுஞ் சேவகனை
அங்கண் அரசை அடியோங்கட் காரமுதை
நங்கள் பெருமானைப் பாடி நலந்திகழப்
பங்கயப் பூம்புனல்பாய்ந் தாடேலோர் எம்பாவாய்.

## பதினெட்டாம் பாட்டு

அண்ணாமலையான் அடிக்கமலம் சென்றிறைஞ்சும்
விண்ணோர் முடியின் மணித்தொகை வீறற்றாற்போல்
கண்ணார் இரவி கதிர்வந்து கார்கரப்பத்
தண்ணார் ஒளிமழுங்கித் தாரகைகள் தாமகலப்
பெண்ணாகி ஆணாய் அலியாய்ப் பிறங்கொளிசேர்
விண்ணாகி மண்ணாகி இத்தனையும் வேறாகிக்
கண்ணா ரமுதமாய் நின்றான் கழல்பாடிப்
பெண்ணேஇப் பூம்புனல் பாய்ந் தாடேலோர் எமபாவாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பத்தொன்பதாம் பாட்டு

உங்கையிற் பிள்ளை உனக்கே அடைக்கலமென்று
அங்கப் பழஞ்சொற் புதுக்குமெம் அச்சத்தால்
எங்கள் பெருமான் உனக்கொன் றுரைப்போம் கேள்
எங்கொங்கை நின்னன்ப ரல்லார்தோள் சேரற்க
எங்கை உனக்கல்லா தெப்பணியும் செய்யற்க
கங்குல் பகலெங்கண் மற்றொன்றுங் காணற்க
இங்கிப் பரிசே எமக்கு எங்கோன் நல்குதியேல்
எங்கெழிலென் ஞாயி றெமக்கேலோர் எம்பாவாய்

## இருபதாம் பாட்டு

போற்றி அருளுகநின் ஆதியாம் பாதமலர்
போற்றி அருளுகநின் அந்தமாம் செந்தளிர்கள்
போற்றியெல்லா வுயுர்க்குந் தோற்றமாம் பொற்பாதம்
போற்றி யெல்லாவுயிர்க்கும் போகமாம் பூங்கழல்கள்
போற்றி யெல்லா வுயிர்க்கும் ஈறாம் இணையடிகள்
போற்றிமால் நான்முகனுங் காணாத புண்டரிகம்
போற்றியாம் உய்யஆட் கொண்டருளும் பொன்மலர்கள்
போற்றியாம் மார்கழி நீ ராடேலோர் எம்பாவாய்.

## பஞ்சபுராணம்

பாலுந் தெளிதேனும் பாகும் பருப்புமிவை
நாலுங் கலந்துனக்கு நான் தருவேன்
கோலஞ் செய் துங்கக் கரிமுகத்துத்
தூமணியே நீயெனக்குச்சங்கத் தமிழ் மூன்றுந்தா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேவாரம்

வேயுறு தோளி பங்கன் விடமுண்ட கண்டன்
மிக நல்ல வீணை தடவி
மாசறு திங்கள் கங்கை முடிமேலணிந்தெனுளமே
புகுந்த அதனால்
ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழன்
வெள்ளி சனி பாம்பிரண்டு முடனே
ஆசறு நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியாரவர்கு மிகவே.

## திருவாசகம்

கடையவனேனைக் கருணையினால்
கலந்தாண்டு கொண்ட
விடையவனே விட்டுடிதி கண்டாய்
விறல் வேங்கையின் தோல்
உடையவனே மன்னு முத்தர
கோச மங்கைக்கரசே
சடையவனே தளர்ந்தேன் எம்
பிரானெனைத் தாங்கிக்கொள்ளே.

## திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே உலப்பிலா லொன்றே
உணர்வதும் கடந்ததோருணர்வே
தெளிவளர் பளிங்கின் திரள் மணிக்குன்றே
சித்தத்துட் தித்திக்கும் தேனே அளிவளருள்ளத்து
ஆனந்தக் கனியே அம்பலராடரங்காகத்
தெளிவளர் தெய்வக் கூத்துகத் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்பல்லாண்டு

பாலுக்கு பாலகன் வேண்டியழுதிடப்
பாற் கடலீந்த பிரான்
மாலுக்குச் சக்கரம் அன்றருள் செய்தவன்
மன்னிய தில்லை தன்னுள்
கூவிக்கும் அந்தணர் வாழ்கின்ற தில்லைச்
சிற்றம் பலமே யிடமாகப்
பாலித்து நட்டம் பயிலவல்லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

ஐந்து பேரறிவும் கண்களே கொள்ள
அளப்பரும் கரணங்கள் நான்கும்
சிந்தையே ஆகக் குணமொரு மூன்றும்
திருந்து சாத்துவிகமேயாக
இந்துவாழ் சடையான் ஆடுமானந்த
எல்லையிற் தனிப்பெரும் கூத்தின்
வந்த பேரின்ப வெள்ளத்துள் திளைத்து
மாநிலா மகிழ்ச்சியில் மலர்ந்தார்.

## திருப்புகழ்

அபகார நிந்தை பட்டுழலாதே
அறியாத வஞ்சரைக் குறியாதே
உபதேச மந்திரப் பொருளாலே
உனைநானினைந்தருள் பெறுவேனோ
இயமா முகன் தனக்கு இளையோனே
இமவான் மடந்தையுத் தமிபாலா
செபமாலை தந்த சற்குருநாதா
திருவாலினன் குடிப்பெருமாளே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதல சேட நாராட அகிலமேரு
மீதாட அபிரகாளி தானாட அவளோடன்ற
திரவீசி வாதாடும் விடையிலேறுவாராட
அருகு பூதவேதாளமவை யாட மதுரவாணி
தானாட மலரில் வேதனாரா மறுவு
வானுலோராட மதியாட வனச மாமி
யாராட நெடிய மாமனாராட மயிலுமாடி
நீயாடி வரவேணும் கதைவிடாத தோள்வீமன்
எதிர்கொள் வாலியால்நீடு கருதலார்கள்
மாசேனை பொடியாகக் கதறு காளி போய்
மீள விஜயனேறு தேர்மீது கனகவேத
கோடுதி கலைமோதும் உததிமீதிலேசாயும்
உலகமூடு சீர்பாத உவணமூர்தி மாமாயன்
மருகோனே உதயதாம மார்பான
தேவ மாராயன் உளமுமாட வாழ்தேவர் பெருமானே.

## சுப்பிரமணியர் விருத்தம்

எத்தனை கவியதும் பாடியும் தேடியும்
இரங்காத வாறுமேது ஏழை கிரங்குவது
சரவண பெருமானிருக்கிறாரு ரென்று
உரையும் சித்தர் முதல் வாக்கியம்
கூறியது பொய்யோ சிவசுப்பரமணியநாதா
தென்பொதிகை மாமுனிக்கு உபதேசமன்று
நீ செப்பியதும் யானறிகுவேன் முத்தனே
முதல்வனே முடியனே அடியேனை முன்னின்று
கார்க்க வாவா முச்சுடர் குரியதிரு நாதனே
வேதனே முப்புராதி அன்பர் குருவே சப்தரிஷி
மாதவா தாதவா கீதவா தமிழ்பாடும்
வாக்கு முதலே தரணிதனில் மயில்மீது
விளையாடி வருகின்ற சண்முகக் குமர குருவே.

ஆராரிருக்கினும் என்கவலை மாற்றுவது
ஆறுமுகக் கடவுளென்று அவனிமுதல்
அன்பத்தி அறுகாத தேசமும் அறியாதவாறு
முண்டோ ஈராறு கையனே இருமூன்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடியனே இனிய கனிவாயழகனே
எட்டெட் டறுபத்தி நாலனே தோளனே
ஏககண போகமான காராரு மேனிகிரி
முகவனக் கிளையவனே கழுகாசல ஆறுமுகனே
கற்றறி உற்றனே சித்தப்ர சித்தனே
கந்தப்பனாதிவேதி தாராரு மையனே
ஞய்யனே ஐயனே சரிசரி வரவேணுமே
தரணிதனில் மயில் மீதில் விளையாடி
வருகின்ற சண்முகக் குமரகுருவே

## திருவாசகம்

## சிவபுராணம்

தொல்லை இரும்பிறவிச் சூழும் தளைநீக்கி
அல்லலறுத் தானந்தம் ஆக்கியதே - எல்லை
மருவா நெறி அளிக்கும் வாதவூர் எங்கோன்
திருவாசகம் என்னும் தேன்.

நமச்சிவாய வாழ்க நாதன்தாள் வாழ்க
இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க
கோகழி ஆண்ட குருமணிதன் தாள் வாழ்க
ஆகமம் ஆகிநின்றண்ணிப்பான் தாள் வாழ்க
ஏகன் அனேகன் இறைவனடி வாழ்க
வேகம் கெடுத்தாண்ட வேந்தனடி வெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன்தன் பூங்கழல்கள் வெல்க
கரம்குவிவார் ஓங்குவிக்கும் சீரோன்கழல் வெல்க
ஈசனடி போற்றி எந்தையடி போற்றி
தேசனடி போற்றி சிவன்சேவடி போற்றி
நேயத்தே நின்ற நிமலனடி போற்றி
மாயப் பிறப்பறுக்கும் மன்னனடி போற்றி
சீரார் பெருந்துறைநம் தேவனடி போற்றி
ஆறாத இன்பம் அருளுமலை போற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவனவன் என் சிந்தையுள் நின்றவதனால்
அவனருளாலே அவன்தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுராணந் தன்னை
முந்தை வினைமுழுதும் ஓயஉரைப் பன்யான்
கண்ணுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற்கெட்டா எழிலார்கழல் இறைஞ்சி
விண்ணிறைந்த மண்நிறைந்து மிக்காய் விளங்கொளியாய்
எண்ணிறந்து எல்லை இலாதானே நின்பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழுமா றொன்றறியேன்
புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருகமாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுரராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லா அநின்ற இத்தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்
மெய்யேயுன் பொன்னடிகள் கண்டிற்று வீடுற்றேன்
உய்யஎன் உள்ளத்துள் ஓங்கார மாய்நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா வெனவோங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே
வெய்யாய் தணியாய் இயமானனாம் விமலா
பொய்யாயின வெல்லாம் போயகல வந்தருளி
மெய்ஞ்ஞான மாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞான மில்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல்லறிவே
ஆக்க வளவுறுதி யில்லாயனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள்தருவாய்
போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின்தொழும்பின்
நாற்றத்தின் நேரியாய் சேயாய் நணியானே
மாற்ற மனம் கழிய நின்ற மறையோனே
கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேன்ஊறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்களோர் ஐந்துடையாய் விண்ணோர்களேத்த
மறைந்திருந்தாய் எம்பெருமான் வல்வினையேன் தன்னை
மறைந்திட மூடிய மாய இருளை
அறம் பாவமெனும் அருங்கயிற்றால் கட்டிப்
புறத்தோல் போர்த்தெங்கும் புழுவழுக்கு மூடி
மலஞ்சோரும் ஒன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய
விலங்கு மனத்தால் விமலா உனக்குக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலந்த அன்பாகிக் கசிந்துள்ளுருகும்
நலந்தானிலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன்மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி
நாயிற் கடையாய் கிடந்த அடியேற்குத்
தாயிற் சிறந்த தயாவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேனார் அமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள்புரிந்து நெஞ்சில் வஞ்சம் கெடப்
பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆராவமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதார் உள்ளத்து ஒளிக்கும் ஒளியானே
நீராய் உருக்கி என் ஆருயிராய் நின்றானே
இன்பமும் துன்பமும் இல்லானே உள்ளானே
அன்பருக்கு அன்பனே யாவையுமாய் அல்லையுமாம்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே
ஈர்த்தென்னை ஆட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்த மெய்ஞ்ஞானத்தால் கொண்டுணர்வார் தங்கருத்தின்
நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வுமிலாப் புண்ணியனே
காக்கும் என் காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தாமிக்காய் நின்ற
தோற்றச் சுடரொளியாய்ச் சொல்லாத நுண்ணுணர்வாய்
மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாம்
தேற்றனே தேற்றத் தெளிவே என் சிந்தனையுள்
ஊற்றான உண்ணார் அமுதே யுடையானே
வேற்று விகார விடக்குடம்பின் உட்கிடப்ப
ஆற்றேனெம் மையா அரனே ஓவென்றென்று
போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பைக் கட்டழிக்க வல்லானே
நள்ளிரவில் நட்டம் பயின்றாடும் நாதனே
தில்லையுட் கூத்தனே தென்பாண்டி நாட்டானே
அல்லல் பிறவி அறுப்பானே ஓவென்று
சொல்லற் கரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

## சிவமயம்

அன்பர் திரு. முத்தையா சண்முகராசா அவர்களின் மறைவினால் மனம் சோர்ந்து கவலையுற்று இருக்கும் அன்னாரின் குடும்பத்தினர் அந்தியேட்டி சபீண்டீகரண கிரியைகளை இன்று நடத்தி அந்த அருமையான மனிதரின் ஆத்மா சாந்தியடைய இறைவனருள் வேண்டி நிற்கின்றனர். அந்த மனித மாணிக்கத்திற்கு எங்கள் அஞ்சலியைச் செலுத்தி அவரின் ஆத்மா சாந்தியடைய நாங்களும் அந்த வழிபாடுகளில் கலந்து கொள்வதில் மனநிறைவு பெறுகின்றோம்.

அமரரின் வாழ்க்கையையும் பண்புகளையும் எண்ணிப் பார்க்கின்ற கட்டத்தில், திருமுருக கிருபானந்தவாரியார் அவர்கள் அருளிய வார்த்தைகள்தான் ஞாபகத்திற்கு வருகின்றன.

"வறியவர்கட்கு வழங்கி அவர்கள்
இன்புறுவதைக் கண்டு நாம் இன்புற
வேண்டும். "ஈத்துவக்கும் இன்பம்
என்பார் திருவள்ளுவர். அங்ஙனம்
ஈந்தவரே வாழ்ந்தவர், ஈயாதவர்
மாய்ந்தவரேயாவார். "ஈயா மனிதரை
ஏன் படைத்தாய் கச்சி யேகம்பனே"
என்று இறைவனைக் கேட்கின்றார்
திருவெண்காடார்"

அமரர் சண்முகராசா ஈந்தவர். எனவே பெருமக்களின் வார்த்தைகளில் "வாழ்ந்தவர்" வாழ்வாங்கு வாழ்ந்த மேன்மையானவர். பலரை வாழவைத்தவர். நாடி வந்த நண்பர்களுக்கு நன்மைகள் பல புரிந்தவர். தன்னை நம்பி வந்தவர்களுக்குத் தன்னலம் துறந்து என்றும் கைகொடுத்துதவிய இனியவர்.

எளிய சுபாவமும் இனிய சொற்களும் மிக்க அந்த உத்தமரை இறைவன் நாங்கள் எல்லாம் எதிர்பார்க்காத முறையில் விரைவில் அழைத்துக் கொண்டு விட்டான்.

அமரர் திரு. சண்முகராசாவின் மறைவு ஈடுசெய்யமுடியாத பேரிழப்பு. அவரின் மறைவால் வாடும் அவர்தம் குடும்பத்தினரின் சோகத்தில் நாங்களும் பங்கேற்று அவர்களின் சோகம், எங்களின் சோகமும் என ஆறுதல் கூறி மறைந்த மனித மாணிக்கத்திற்கு அஞ்சலி செலுத்தி நிற்கின்றோம்.

ஓம்சாந்தி! சாந்தி! சாந்தி!

**கந்தையா நீலகண்டன்**
சட்டத்தரணி
பொதுச் செயலாளர், அகில இலங்கை இந்துமாமன்றம்
செயலாளர்,பாடசாலை அபிவிருத்திச்சபை இந்துக்கல்லூரி, கொழும்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அணையாத காரியாலய ஒளிவிளக்கு

அன்புக்கும் பண்புக்கும் எடுத்துக்காட்டாக விளங்கிய எங்கள் காரியாலய ஸ்தாபகர் உயர் திரு. முத்தையா சண்முகராசா அவர்களை நாங்கள் இழந்தது எங்களுடைய ஸ்தாபனத்திற்கு மட்டுமல்ல அன்னாரது உறவினர்கள், நண்பர்கள் யாவருக்குமே ஒரு பேரிழப்பாகும். அன்னாரது அன்பு நடத்தையும், மென்மொழியும், அளப்பரிய சேவையும் அவருடன் கூடவே பிறந்த நற்பண்புகளாகும்.

எங்கள் யாவருக்கும் அன்னார் ஓர் முன்மாதிரியாக ஓர் தந்தையாக, சிறந்த ஒளி விளக்காக, பண்புமிக்க ஓர் பாதிரியாராக வாழ்ந்து காட்டினார். அவர் காட்டிய பாதையில் நாங்கள் அவரது சேவையினை மேன்மேலும் ஒளிகூட்டி, சிறப்புப் படுத்தி எமது சேவையை தொடருவதே நாங்கள் அன்னாருக்கு செய்யும் சிறந்த பணியாகும்.

அன்னாரது பிரிவினை தாங்கொணாது வேதனையில் ஆழ்ந்திருக்கும் மனைவி, மக்கள், உற்றார், உறவினர், யாவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தை மிகவும் கவலையுடன் தெரிவித்துக் கொள்கிறோம். அன்னாரது ஆத்மா சாந்தியடைய குளோபல் ஸ்தாபனத்தினர் யாவரும் பிரார்த்திப்போமாக.

D.T. செல்வநாயகம
குளோபல் ஸ்தாபனத்தினர் சார்பாக,
இல. 94, பாங்சால் வீதி
கொழும்பு 11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நினைவு அஞ்சலி

திரு. முத்தையா சண்முகராசா அவர்கள் மறைந்த செய்தி எமக்கு மிகுந்த மனத்தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தது.

பல ஆண்டுகள் இதய வருத்தம் மற்றும் நோய்களினால் பாதிக்கப்பட்டிருந்தாராயினும் மனத்திடத்தினால் நோயின் தாக்கத்தை வெற்றிகொண்டே வாழ்ந்து காட்டினார்.

பத்து ஆண்டுகளுக்கு மேலாக அவரை அறிந்திருக்கிறேன். 1983 பிற்பகுதியில் சென்னையிலும் புதுடில்லியிலும் சந்திக்கும் வாய்ப்புக் கிடைத்தது. தொலைத் தொடர்பு நிலையம் ஒன்றை இந்தியாவிலும் திறப்பது சம்பந்தமாக வந்திருந்தார்.

அவர் தொலைத் தொடர்புத் தொழில் நுட்பத்தில் ஆழமான ஆற்றல் பெற்றிருந்தார். தொலைத் தொடர்பு நிறுவனங்களை கொழும்பிலும், யாழ்ப்பாணத்திலும் பின் இந்தியாவிலும் தன் சொந்த முயற்சியினால் தொடங்கி வியாபார ரீதியில் வெற்றிபெற்றதுடன் நல்ல பயனுள்ள பணியையும் மேற்கொண்டிருந்தார்.

தொழிலிலும் கூட எல்லோரையும் நம்பும் நல்ல மனிதராக நடந்து கொண்டதனால் ஏற்பட்ட பாரிய இழப்புக்களையும் பொருட்படுத்தாமல் தன்னம்பிக்கையுடனும் விடாமுயற்சியுடனும் தன் தொழிலை நடத்தி வந்தார்.

உதவி கேட்டு வந்தோருக்கும், அகதிகளாய் அநாதைகளாய் இந்தியா வந்தோருக்கும் குறிப்பறிந்து தன்னால் முடிந்த உதவிகளைப் புரிந்து வந்த இரக்க சுபாவம் மிகுந்தவர். அவர் அன்பும் அடக்கமும் - அமைதியும் நிறைந்த ஒரு பண்புள்ள மனிதராய் இறுதிவரை வாழ்ந்திருந்தார், என்றும், காணும் போது இன்முகத்துடன் வரவேற்பதையே கண்டிருக்கின்றேன்.

"இடுக்கண் வருங்கால் நகுக" என்னும் வள்ளுவர் வாக்குக்கு இலக்கணமாக வாழ்ந்து காட்டினார். தமிழ் மக்களின் இடர்தீர அம்மக்கள் விடுதலைபெற வேண்டும் என்ற இலட்சிய உள்ளங் கொண்டிருந்தார் அதற்காக தன்னாலியன்ற ஆதரவையும், உதவிகளையும் வழங்கி வந்தார்.

அன்னார் இல்லத்தரசியும், பிள்ளைகளும் நலம்பெற வாழ்ந்திட அவர் வாழ்வும், பணிகளும் வழிகாட்டி நிற்கும் என நம்புகின்றேன்.

அன்புடன்,
**மாவை. சோ. சேனாதிராசா பா. உ.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## என்றும் எங்கள் நினைவில்..................

## எங்களை உருவாக்கிய இமயத்துக்கு சமர்ப்பணம்

அன்றும் இன்றும் என்றும் என்றென்றும் எங்கள் உள்ளமென்ற மன்றத்தில் நின்று, நிலைத்திருக்கும் தலைவருக்கு அஞ்சலி,

ஆழி சூழ் உலகமெல்லாம் அறிவாலே வெல்ல வேண்டும் என்ற அவா படைத்த அவரின் ஆற்றலே தொலை தொடர்பை எல்லோருக்கும் எட்டவைக்கக்கூடிய, எல்லோரையும் இணைத்து வைக்க கூடிய அளவில் அனைவருக்கும் பொதுவாக்கிய குளோபல் கொமினிகேஷனை தொடக்க வைத்தது, அந்த மட்டில் இலங்கையில் தனியார் தொலைத் தொடர்பு துறையில் முன்னோடி என்ற பெயர் திரு. சண்முகராசாவுக்கு உரியதாகும். இன்று உலகின் எந்த மூலையில் இருக்கும் தமிழனுக்கும் குளோபலைத் தெரியாமல் இருக்கமுடியாது. கொழும்பில், யாழ்நகரில் இலங்கையின் எப்பாகத்தவருக்கும் குளோபல் புதிதானதல்ல. அந்த அளவிற்கு இத்தொழில் பிரபலமும், இதிலிருந்து நூற்றுக்கணக்கான தொலைத் தொடர்புமையங்கள் உருவாக காரணமாக இருந்தவரும் இவர் தான் என்றால் மிகையாகாது.

எந்நேரமும், "தொழில்" என்ற சிறந்த சிந்தனை மிக்கவர். புதிதாக எவரும் தொழில் தொடங்க ஆர்வம் காட்டினால் அதுவும் இளைஞர், படித்தவர் அணுகினால், இடமும் பணமும் ஊக்கமும் தந்து ஆயிரக்கணக்கான புதியவர்களை தொழிலுக்கு அறிமுகப்படுத்திய பெருமை இவருக்குண்டு. திறமைகளை கண்டு பிடிக்கவும், ஊக்கம் தரவும் வெளிக் கொண்டுவரவும் தெரிந்த வல்லவர். தன் பிள்ளைகளைப் போல அடுத்தவர் பிள்ளைகளையும் மதிக்கும் காக்கும் பண்பாளர்.

தாயுள்ளம் கொண்ட தயாபரன் அம்மையும் அப்பருமாகி ஒப்பிலா மணியாக உதவும் கரம் நீட்டும் உயர்ந்த உள்ளம் கொண்டவர். இன்று அவர் கையினால் உருவாக்கப்பட்டவர் பலர் உலகெங்கிலும் பரந்து இருக்கின்றனர். வலது கை கொடுப்பதை இடது கை அறியாதவாறு வழங்கும் வள்ளல் அவர். நகைச் சுவை உணர்வும் பக்தி மார்க்கமும் கொண்டவர். இலங்கையில் அவரைப் பற்றி எவரிடம் கேட்டாலும் அவரை விட நல்லவரில்லை என்றே சொல்வார்கள்

செந்தூர் முருகன் பால் மட்டற்ற பக்தி கொண்டவர் பலரைக் கைதூக்கி விட்டவர். இப்படி பலவாறு சொல்லிப் புகழக் கூடிய அளவு தங்க மனம் படைத்தவர். பொறுமை, பிறரை மதிக்கும் குணம், அகழ்வாரைத் தாங்கும் நிலம் போல தன்னை இகழ்வாரைப் புகழும் குணம் உடையவர். எல்லோரும் வாழ வேண்டும் என்ற எண்ணம் கொண்டவர்.

சொந்தச் சகோதரர்கள் துன்பத்தில் வாடுதல் கண்டும் சிந்தை கலங்காதவர்கள் வாழும் உலகில், இரக்கம் காட்டி அரவணைக்கும் அரிய குணம் படைத்தவர். பிறர் துயர் அறிந்து கண்ணீர் துடைத்து உதவும் கரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீட்டி ஆறுதல் சொல்லும் குணமே அவரது தலையாய பண்பாகும்.

அவரிடம் வேலை செய்த பலர் இன்று பல உயர்ந்த பதவிகளில் இருக்கின்றனர். ஆனாலும் அவரிடம் கொண்ட அன்பு மாறாது உள்ளனர் அந்த அளவுக்கு அவர்களின் நெஞ்சங்களில் இடம் பிடித்துக் கொண்டவர் திரு சண்முகராஜா. அவரது அரிய குணங்களும், அன்பான மனமும், வள்ளல் தன்மையுமே அவரது மூன்று மகன்களுக்கும், மகளுக்கும், மனைவிக்கும் அரணாக வேண்டும் என்பதே அனைவரினது பிரார்த்தனையுமாகும்

ஊரில் எல்லோருக்கும் அவர் செய்த புண்ணியமே இனிமேல் அவர் குடும்பத்தவரை நல்ல வழியில் கொண்டு செல்ல உதவ வேண்டும் என்பதே எல்லோரது வேண்டுதலாகும்.

நோய்வாய்ப்பட்டிருந்த போதும் செந்தூர் முருகனிடம் பூஜை வைக்க வேண்டும் என்ற புனித மனம் கொண்ட அவரை கடலாடும் செந்தூர் வாழ் வேல் பெருமானே பிறவிக் கடல் நீந்த உதவவேண்டும்

வாழ்கின்ற போதே வரலாறு ஆன திரு. சண்முகராஜா எங்களுக்கு விட்டுச் சென்றுள்ள கடமைகளை அவர் பிள்ளைகளோடு பிள்ளைகளாக நாங்கள் சரிவர செய்வதற்கு அவரே துணை நிற்க வேண்டும்.

ஓராயிரமாண்டு ஓடிப்புலம்பினாலும் வராது, வருமோ இந்த மாமணி ? மலை போல் நிமிர்ந்து நின்ற உடல் மண்ணோடு மண்ணாக போனாலும் எங்கள் நினைவில் நிமிர்ந்து நிற்கும் இமயம் அவர்.

எங்கள் வாழ்க்கையில் ஒளியும் வளமும் கூட்டிய அந்த வாசமலரின் மணம் எங்கள் இதயங்களில் என்றும் பவனி வரும்.

தள்ளாடி நடந்த போது வாழ்க்கை எனும் நிமிர்ந்த நடையை பழக்கித் தந்த அந்த பண்புச் சிகரத்தின் பாசமும், நேசமும் என்றும் எங்களுக்குத் துணையாகக் கூட வரும்.

"உன் கையில் பிள்ளை உனக்கே அடைக்கலமென்று" எங்களை எங்கெங்கு சேர்க்க வேண்டுமோ அந்தக் கடமைகளை சரிவர செய்த அவர் அவரது பிள்ளைகளுக்கு ஆற்ற வேண்டிய கடமைகளை செய்ய முடியாது. காலன் பறித்தாலும், காலம் பிரித்தாலும் நாங்கள் செய்வோம் நாளை வெல்லுவோம் என்று இந்த நேரத்தில் உறுதி பூணுவது அவரது பட்டறையில் செப்பனிடப்பட்ட, புடம் போடப்பட்ட ஒவ்வொரு போர்வாளின் கடமையுமாகும்.

அந்த உணர்வுடன் அவரது ஆத்ம சாந்திக்காக பிரார்த்தனை செய்வோம்.

அவரால் உருவாக்கப்பட்ட
கலாநிதி. சந்திரிகா சுப்பிரமணியன்
(சென்னை)
(குளோபல் குரூப் நிறுவனங்களுக்காக)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமரர் சண்முகராசாவின் நினைவு மலருக்கு எனது அஞ்சலியை கூறுவதில் மனநிறைவு அடைகிறேன்.

*அமரர், இனியநண்பனாக, கேளாமலே உதவிசெய்யும் பண்பாளனாக பல ஆண்டுகளாக என்னுடன் பழகியுள்ளார். பல சந்தர்ப்பங்களில் அவரின் தமிழ்ப்பற்றையும், ஆழ்ந்த இனஉணர்வையும், தமிழ் இயக்கங்களுக்கு உதவிசெய்யும் ஆர்வத்தையும் கண்டு மகிழ்ந்திருக்கிறேன்.*

*தொழில் அதிபர்களில் பலவகை உண்டு. சிலர் பணம் ஈட்டுவதே ஒரே நோக்கமாக உள்ளவர்கள். ஆனால் தனது பணத்தை மக்களுக்கு நன்மை ஏற்படக் கூடிய தொழில்களில் முதலீடு செய்தார். சில ஆண்டுகளாக தமிழ் இளைஞர்கள் பலநாடுகளுக்கு அகதிகளாக சென்றுள்ளார்கள். அவர்கள் தங்கள் சுற்றத்தாருடன், தாய்மார்களுடன், தகப்பனார்களுடன் தொடர்பு கொள்ள ஆவலாயுள்ளனர். அவர்கள் இலகுவாக குறைந்த செலவுடன் தொடர்பு கொள்ளக் கூடிய வசதிகளை ஏற்படுத்தினார்.*

*மேலும் இந்தியாவில் அகதிகளாக சென்ற இளைஞர்கள் பிரயோசனமான தொழிலை கற்பதற்கு ஓர் கொம்பியூட்டர் கல்வி நிலையத்தை சென்னையில் ஆரம்பித்தார்.*

*மேலும் பல உபயோகமானவற்றைச் செய்ய எண்ணியிருந்தார். ஆனால் விதி சதி செய்து விட்டது. அவரின் ஆத்மா இறைவனடி சேர்ந்து சாந்தியடைய பிரார்த்திக்கின்றேன்.*

**மு. சிவசிதம்பரம்**

*20.1.1993*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கள் ; CHAIRMAN

எளிய வாழ்வு. ஆழ்ந்த அன்பு. பரந்த உள்ளம். விரிந்த எண்ணம் இந்நான்கும் இவ்வுலகிலேயே விண்ணுலக வாழ்வாகிய பேரின்பத்தை அளிக்கவல்லது என்பது ஆன்றோர் மொழி.

இதற்கு இலக்கணமாகத் திகழ்ந்தவர்தான் எமது மதிப்புக்கும் அன்புக்கும் உரிய அமரர் மு. சண்முகராசா அவர்கள். குளோபல் சண்முகராசா என்றால் தெரியாதவர்கள் யாருமில்லை. சிங்களவர் களாயினும் சரி தமிழர்களாயினும் சரி முஸ்லிம்களாயினும் சரி ஏதோ ஒரு வகையில் தொடர்புபட்டவர்களாக இருந்தார்கள். நான் 1988 ம் ஆண்டு முதல் 1989 வரை இந்தியாவில் தங்கியிருந்த சமயம் சென்னையில் இயங்கிவந்த குளோபலில் ஒருசில காலம் பணி செய்த பொழுது சில சிங்கள - முஸ்லிம் நன்பர்களை அறிமுகப்படுத்தி வைத்ததில் இருந்து, அவர் ஒரு சமூகப் பணியாளார் என்பதையும் இன மத பேதமற்ற ஒரு சமதர்ம வாதி என்பதையும் அறிந்து கொண்டேன்.

எம்முடன் பழகும் போது ஒரு தந்தையாக - குருவாக - நண்பனாக பழகிய நற்பண்பாளர். மிகவும் வேடிக்கையாகப் பேசும் எமது Chairman என்னதான் கோபம் கொண்டிருந்தாலும் அதை வெளிக்காட்டிக் கொள்ளாதவராகத் திகழ்ந்தார். எல்லாருடனும் மிகவும் இலகுவில் பழகும் தன்மையுடைய எமது Chairman ஒரு போதும் தான் ஒரு நிறுவனத்தின் முகாமையாளர் என்ற மிடுக்கில்லாதவராக பழகினார். தானும் எம்முடன் இணைந்து பணிபுரிவதை விரும்பியதுடன் - எம்மை சில வேளைகளில் ஓய்வு எடுக்கும்படி கூறிவிட்டு தானே குனிந்திருந்து Telex இயந்திரத்தில் செய்திகளை பதிவு செய்வதோடு, தானே அச்செய்திகளை வேண்டிய இடங்களுக்கு தொடர்பு கொண்டு அனுப்பியும் வைப்பார். இரவு பகல் பாராது தனது உடல் நிலையைப் பொருட்படுத்தாமல் மக்கள் பணிபுரிந்த எமது Chairman அவர்களை, கடந்த மூன்று மாதங்களுக்கு முன்னர் படுக்கையில் உடல்நிலை படுமோசமாகப் பாதிக்கப்பட்ட நிலையில் கண்ட பொழுது, எமது Chairman சண்முகராசா அவர்களுக்கா இந்நிலை என்று அதிர்ச்சியும் ஏக்கமும் கொள்ள வேண்டிய துர்ப்பாக்கிய நிலை எனக்கு ஏற்பட்டது. உடனுக்குடன் வேலைகளை நிறைவேற்றும் கொள்கை - திடமான நம்பிக்கை - பலரால் நம்பி மோசமடைந்தாலும் சலியாத மனம் கொண்ட எமது Chairman அவர்கள் இந்தியாவில் எமது பிள்ளைகளின் முன்னேற்றத்திற்காக (Computer வகுப்புகளை ஒழுங்கு செய்து - பணவசதியற்ற இளைஞர்கள் சிலருக்கு இலவசமாக அந்த வகுப்புகளை நடத்தவும் பணித்தார். இந்த இளைஞர்களை குளோபலில் பகுதி நேர



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நன்றி நவிலல்

எங்கள் குடும்பத்தின் ஒளிச்சுடராகவும், எமக்கும் மற்றோருக்கும் நல்வழிகாட்டியாகவும், எல்லோரின் நன்மதிப்பிற்குரியவராகவும் விளங்கிய எங்கள் அன்புத்தெய்வம், சுகயீனமுற்று இருந்த வேளையிலும், விண்ணகம் விரைந்த வேளையிலும் எங்கள் பாசமலரின் மரணச் செய்தியை சகபேருக்கும் அறிவித்தவர்களுக்கும், தபால், தந்தி, தொலைபேசி மூலம் எங்களிற்கு அனுதாபம் தெரிவித்தோர்க்கும் வாகன வசதிகள் தந்துதவியோர்க்கும் இன்று நடைபெற்ற அந்தியேட்டி கிரியைகளில் கலந்த கொண்டவர்களுக்கும் இக்காவிய மலரை யாத்துதவிய எஸ் கணேசசர்மா (எஸ் ராஜகோபாலன்) அவர்களுக்கும் இம்மலரை விபரமாகவும், விரைவாகவும் அச்சிட்டு உதவிய அச்சகத்தார்க்கும் மேலும் உதவிகள் செய்தவர்களுக்கும் எங்கள் இதயபூர்வமான நன்றியை தெரிவிக்கின்றோம்.

இவ்வண்ணம்,
மனைவி, பிள்ளைகள்,
உற்றார், உறவினர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதவியாளர்களாக பணிபுரிய வைத்து அவர்களுக்குத் தேவையான வசதிகள் அளித்ததோடு வேண்டிய நேரம் பண உதவிகளையும் செய்துவந்தார்.

அவரது குடும்பத்தில் ஒரு பிள்ளையைப் போல நான் பழகினேன். அவரும் இடையிடை கூறுவார் "முகுந்தன் எனது மூத்த பையன்" என்று அவரது துணைவியார், பிள்ளைகள், மற்றும் யாராவது விருந்தாளிகளை இந்தியாவுக்குக் கூட்டி வரும் போது நானும் அவர்களுடன் இணைவது வழக்கம். சிங்கப்பூரில் நடந்த Computer கண்காட்சிக்கு என்னையும் தன்னுடைய செலவிலேயே அழைத்துப் போனதை நான் இங்கே குறிப்பிட விரும்புகின்றேன். அவர் செய்த உதவிகள் பலரால் மறக்கப்பட்டாலும் என் உயிருள்ள வரை என்றும் மறக்கமுடியாது. அவரது ஆத்மா சாந்தியடைய திருச் செந்தூர் முருகனைப் பிரார்த்திக்கின்றேன்.

வணக்கம்.

**த. முகுந்தன்**

*20.01.1993*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org